சிவமயம்

Registered as a News-paper in Ceylon

P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத் ருசு] யாழ்ப்பாணம்:—தாரண வரு பங்குனிமீ கூஉ (1945 மார்ச்மீ 22உ வியாழக்கிழமை) [இல கூரு


## "காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்வதெப்போ?"

### "கொமன்ஸ்" சபையில் இந்தியா மந்திரி அமெரி பதில்

#### பாராளுமன்ற வட்டாரத்தில் திருப்தி

"காங்கிரஸ் தலைவர்களைக் காலவரையறையின்றிச் சிறையில் வைத்திருக்க உத்தேசமில்லை. சட்ட அமைதிக்கு அவர்களால் பாதக மேற்படாதென்றும், யுத்தகளமான இந்தியாவின் பாதுகாப்பு அவர்களால் பாதிக்கப்படாதென்றும் இந்திய அரசாங்கம் கருதினால் அவர்கள் உடனே விடுதலை செய்யப்படுவார்கள்" என்று இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி "கொமன்ஸ்" சபையில் ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"ஜப்பான் தோற்கடிக்கப்படுகிற வரையிலோ அல்லது அரசினரின் கிடந்தனைகளை ஏற்கிறவரையில் காலவரையறையின்றியோ காங்கிரஸ் தலைவர்களைச் சிறையில் வைத்திருக்க மன்னர் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?" என்று மிஸ்டர் ஸோரன்ஸன் கேட்டதற்குக் மிஸ்டர் அமெரி மேற்கண்டவாறு பதிலளித்தாராம்.

அமெரியின் பதிலைக் கேட்டபிறகு பின்வருமாறு ஸோரென்ஸன் கேட்டாராம்:—

"இப்பொழுது அவர்களை விடுவிப்பதனால் நிலைமை பாதகமடையாது என்பதை அமெரி உணருகிறாரா?"

அமெரி:- "இந்த விஷயத்தில் இந்திய அரசாங்கத்தின் அபிப்பிராயமே இறுதியானது. பொது விடுதலைக்குக் காலம் வரவில்லை என்றே அது கருதுவதாகத் தெரிகிறது. ஒவ்வொருவராகத் தனித்தனித் தலைவர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருவார்கள்."

ஸோரன்ஸன்:- "இதே முறையிலேயே, காந்திஜியைப்போலவே இதர காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்படுவர் என்று நாங்கள் எண்ணலாமா?"

அமெரி:- "அந்தக் காலம் வரும்பொழுது கவனிப்போம்."

### அமெரியின் அறிக்கைபற்றி ஸோரென்ஸன்

இந்தியாவின் தேசிய அபிலாஷைகள் விஷயத்தில் விசேட விருப்பம் கொண்டுள்ள "கொமன்ஸ்" சபை வட்டாரங்கள் மிஸ்டர் அமெரி அளித்த பதிலைத் திருப்திகரமாகக் கருதுகின்றனர்.

பாராளுமன்ற அங்கத்தினர்களின் இந்தியசார்புக் கோஷ்டியின் பிரபல மெம்பரான மிஸ்டர் ஸோரன்ஸன் ராய்ட்டர் அரசியல் நிருபரிடம் பேசுகையில், "அமைப்பதில் சற்று மேகம் கலைகின்றது" என்று குறிப்பிட்டார். "காலவரையறையின்றிக் காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் வைக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற விஷயம் சந்தோஷத்தையளிக்கிறது. காலவரையறையின்றிச் சிறையில் வைப்பது முட்டாள்தனம் என்று பண்டிதரான அரசாங்கம் கருதி ஆரம்பித்தால் நேருக்குச் சகாக்களில் பலருக்கு உசிதம் என்பதும் அவர்களுக்குப் புலப்படும். இப்பொழுது ஜப்பான்மீது தாக்குதல் பலமாகப்போகிறது. இந்தச் சமயத்தில் சிறைக் கதவுகளைத் திறந்துவிடுவது மிகவும் பொருத்தமே" என்றும் ஸோரன்ஸன் கூறினார்.

அமெரியின் இம்முறைப் பதில் இதற்கு முந்திய பதில்களைவிட அதிக நியாய புத்தியுடன் கூடியிருக்கிறது என்று தொழிற்கட்சி அங்கத்தவர் மிஸ் டேவிஸ் கூறினாராம்.

தொழிற்கட்சி அங்கத்தவரும் பிரிட்டனிலுள்ள இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களில் அடிக்கடி அக்கிராசனம் வகிப்பவருமான மிஸ்டர் ஸோரன்ஸன், மிஸ்டர் அமெரியின் தொனி மாறியிருப்பதைக் குறித்துச் சந்தோஷத்தைத் தெரிவித்துள்ளாராம். "முட்டுக்கட்டையைத் தீர்க்கும் நோக்கத்துடன் அரசினர் அதிகாரிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் ஒன்று சேர்க்கும் எந்த முயற்சியும் வரவேற்கப்படும் மென்பதில் சந்தேகமில்லை. ஐரோப்பிய யுத்தம் முடிந்தவுடன் இந்தியாவின் முக்கியத்துவம் அதிகமாகும். பிரிட்டிஷ்—இந்திய ஒப்பந்தமின்றி உலகப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. இந்தியா—பிரிட்டிஷ் காமன்வெல்தக்குள்ளிருக்க வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்" என்று மிஸ்டர் ஸோரன்ஸன் கூறியுள்ளாராம்.

---

### கொழும்புத் தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

சென்ற 19-ந் தேதி திங்கட்கிழமை கொழும்பு பெரிய தபாலகந்தோரைச் சேர்ந்த பணியாட்கள், போட்டர்கள், போஸ்ட்மன்கள், தொழிலாளிகள், தற்காலிகமாக அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகள் ஆகியோர் உட்படச் சுமார் 500 பேர் திடீரென்று வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். அவர்கள் வழக்கம்போலக் கந்தோருக்கு வந்து கையொப்பப் புத்தகத்தில் கையொப்பம் வைத்துவிட்டு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனராம். அன்று காலையில் பிரதம போஸ்ட்மாஸ்டரும், டெபியூட்டி போஸ்ட்மாஸ்டரும், மெயில் சப்ரண்டனும் தபால் வண்டிகளில் தபால் மூட்டைகளை ஏற்றிவண்டியேற்றியதாக கொழும்புப் பத்திரிகையொன்று கூறுகிறது.

வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் சம்பள உயர்வையும், வேலை நிலைமையில் அபிவிருத்தியையும் கோருகிறார்களாம்.

குறைகளை அதிகாரிகள் விசாரிப்பதாகக் கூறியதும் செவ்வாய்க்கிழமை காலை முதல் அவர்கள் வேலையைத் தொடர்ந்து செய்கிறார்களாம்.

## சிங்கள சமூகத்தைக் காப்பதற்குப்

### பல பகைவருடன் போராடவேண்டுமாம்!

"துட்டகைமுனு தம் பகைவனாகிய எல்லாளனுடன் போர் செய்தான்; ஆயின் இன்றைய சிங்களவராகிய நாமோ இப்பூமியிலிருந்து அழிந்து போகாவண்ணம் எம்மைப் பாதுகாப்பதற்காக எத்தனையோ பகைவருடன் போரிடவேண்டியிருக்கின்றது" என்று ஸ்தல ஸ்தாபன மந்திரியாகிய மிஸ்டர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் ஹஸிதேவலைக் கிளைச் சிங்கள மகாசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கூறினாராம்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"நாம் ஒரு சமூகத்தவருக்கும் எதிரிகளல்ல, ஆனால் எங்கள் உரிமையைப் பாதுகாக்கவும் நிலைநாட்டவுமே பாடுபடுகின்றோம்; சிங்கள சமூகத்தவர் மற்றும் இதர சமூகத்தினருக்கு ஒருவிதமான தீமையுஞ் செய்யவில்லை; மற்றச் சமூகத்தினர் தீங்கிழைத்தாலும் அதைச் சகித்திருக்க மாட்டார்கள்.

தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளும்வரைக்கும் ஒன்றுஞ் செய்ய முடியாத நிலைமையிலிருக்கின்றோம். இந்த யுத்தத்தின் முடிவில் 30,000 பேர் வேலையில்லாது திண்டாடுவதற்குஆளாவார்களென்பது திண்ணம். டாக்டர் கன்னங்கராவின் திட்டப்படி 700,000 ரூபா வேண்டும். இலவசக்கல்வியை நாட்டில் அபிவிருத்தி செய்வதற்கு, அப்பணத்தை எங்கிருந்து பெறப்போகின்றார் என்பது தெரியவில்லை."

---

### "எங்கள் கௌரவத்துக்கே அவமானம்"

கொழும்பு நகரில் புதிய அரிசிக் கூப்பன்கள் வழங்க வீடுகள்தோறும் சென்று கணக்கெடுக்க உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோரைச் சேர்ந்த குமாஸ்தாக்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்களல்லவா? இவர்களுடைய வேலையை மேற்பார்வையிட பட்டதாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதை மேற்படி குமாஸ்தாக்கள் பிரதம காரியதரிசியிடம் பலமாக ஆட்சேபித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது ஆட்சேபனையில் கூறுவதாவது:—

"எங்கள் வேலையை மேற்பார்வையிட 'சிவில்' அதிகாரிகளோ அல்லது உயர்தர கிரேட் குமாஸ்தாக்களோ நியமிக்கப்பட வேண்டும். இன்றேல் இந்த வேலையிலிருந்து எங்களுக்கு விடுதலை அளிக்கவேண்டும். பொதுக் குமாஸ்தா சேவையைச் சேர்ந்த எங்கள் வேலையை உத்தியோகப் பற்றில்லாதவர்களும், கல்லூரிகளிலிருந்து இப்பொழுதுதான் வெளிவந்திருக்கக்கூடியவர்களுமான பட்டதாரிகளைக் கொண்டு மேற்பார்வையிடச் செய்வது எங்கள் கௌரவத்துக்கே பங்கமேற்படுத்துவதாயிருக்கிறது."

---

### சபை முதல்வரின் புதிய கட்சி

"அரசாங்கசபை வட்டாரங்களிலெட்டிய வதந்திகளின்படி, அரசாங்க சபை முதல்வராகிய மிஸ்டர் டீ. எஸ். சேனநாயக்காவும், போக்குவரத்து மந்திரியாகிய மிஸ்டர் ஜே.எல். கொத்தலாவலையும் "தேசிய ஜனநாயகக் கட்சி" என்னும் ஒரு புதிய அரசியல் ஸ்தாபனத்தை மிகவும் சீக்கிரத்தில் ஏற்படுத்தப்போகின்றார்கள்" என்று கொழும்புத் தினசரித் தாளொன்று அறிவிக்கின்றது.

---

### ஹிட்லர் எழுதிய நூல் வைத்திருந்தவர் கைது

பம்பாய், மார்ச் 18

ஹிட்லர் எழுதிய 'மைன்காம்ப்' என்ற புத்தகம் வைத்திருந்ததாகவும் இப் புத்தகத்திலிருந்து சாரமான பகுதிகளை எடுத்து இந்தியா பூராவும் அனுப்பியதாகவும் ஸ்ரீ முகுந்தலால் சர்க்கார் கைது செய்யப்பட்டார். இவர் பார்வர்ட் பிளாக் கட்சியின் ஆர்கனைசர், வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

---

### ஹிந்துநேசன் நிருபர் ஒருவர் கைது?

#### சில கைப்பிரதிகளும் கைப்பற்றப்பட்டனவாம்

திருச்சியில் ஸ்ரீ ரத்னசிங் என்ற ஒருவர் கைது செய்யப்பட்டார், அவர் ராணுவ வேலையிலிருந்து ஓடிவந்துவிட்டதாக அவர்மீது புகார். பொலீஸ் விசாரணையில் வேறு ஒரு மர்மமும் வெளியாயிற்று. அவர் 'இந்துநேசன்' பத்திரிகையின் ரகசிய ரிப்போர்ட்டராக இருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. இந்துநேசன் பத்திரிகையில் வெளியிடவைத்திருந்ததாகக் கூறப்படும் சில கைப்பிரதிக் கட்டுரைகள் கைப்பற்றப்பட்டன.

---

### சோல்பரி கமிஷனிடம் நம்பிக்கையில்லையாம்

கட்டுக்குருந்தையில் சுதேசபாஷா ஆசிரியர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. தங்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்க சோல்பரி கமிஷன் மறந்துவிட்டதை ஆட்சேபித்து கூட்டத்தில் சிலர் பேசினார்கள். கிராமிய ஜனங்களுடன் சுதேசபாஷா ஆசிரியர்களுக்கு நெருங்கிய சம்பந்தமிருக்கிறதென்றும் அவர்களுடைய அபிப்பிராயங்களை விசாரித்தாலேதான் கிராமாந்தரங்களின் உண்மையான நிலைமை சோல்பரி கமிஷனுக்குத் தெரியுமென்றும் கூட்டத்துக்குத் தலைமைவகித்த ஸ்ரீ டி பீட்டர் சில்வா கூறினார். சோல்பரி கமிஷனிடம் நம்பிக்கையில்லையென்று கூட்டத்தில் ஒருதீர்மானம் நிறைவேறியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
பங்குனிமீ கூஉ வியாழக்கிழமை


## திருவிழாக் காலம்

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவத் தேவாலயங்களிற் கொடியேறி மகோற்சவம் நடைபெறும் காலம் பெரும்பாலும் பங்குனி தொடக்கம் புரட்டாதி முடியவுள்ள மாசங்களாம். இப்பொழுது நிகழும் சுக்கில பக்கத்தில் இங்குள்ள சில கோயில்களில் துவஜாரோகணமாகிப் பெருந் திருவிழாக்கள் நடைபெறுகின்றன; இத் திருவிழாக் காலத்திலே ஆங்காங்குள்ள சைவ மக்களும் அவ்வக் கோயிலதிகாரிகளும் அர்ச்சகர் உற்சவாசாரியர்களும் அவதானித்துச் செய்ய வேண்டியன சிலவுள.

ஒரு ஆலயத்திலே நடக்கும் நித்திய நைமித்திகங்களுள் அபுத்தி பூர்வமாக நேரும் தவறுகளுக்குப் பிராயச்சித்தமாகவே வருடந்தோறும் ஆலயங்களில் மகோற்சவமெனும் பெருந்திருவிழா நடத்தப்படுமென்பது நூல்களின் கொள்கையாகும். இங்ஙனம் பிராயச்சித்த நோக்கமாகச் செய்யப்படும் மகோற்சவத்திலும் புத்திபூர்வமாகவோ அபுத்தி பூர்வமாகவோ தவறு நேர விடுதல் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுதலையொக்கும். ஆகையால் உற்சவ ஆசாரியராகவுள்ளவர் ஆகம சாத்திரவுணர்ச்சியுடையவராக விருத்தலோடு மாத்திரம் அமையாது அவற்றின்கண்ணே விதிக்கப்பட்ட கிரியைகளைப் பக்தியுடன் செய்தற்கு நன்கு பயின்றவராயுமிருத்தல்வேண்டும். ஆகம சாத்திர வுணர்ச்சியுடைய வராயிருத்தல் வேறு, அவற்றில் விதிக்கப்பட்டபடி பக்திபூர்வமாகச் செய்தல் வேறு என்றே சொல்லவேண்டியிருக்கிறது; உற்சவாசாரியர் ஆகம சாத்திரவுணர்ச்சியுடையராய், தாம் உணர்ந்தவற்றைப் பயபக்தியோடு செய்யத்தக்கவராயிருப்பரேல், அவர் சொற்படியே ஏனைய அர்ச்சகர் பரிசாரகர்களாக, கோயிலதிகாரியாக, உபயஞ் செய்வோராக, தரிசனம் செய்யவரும் சனங்களாக, வேறு எவராக நடந்துகொள்ளுவார்கள். கல்வியறிவிற்குறைந்த ஐயரே கோயிலதிகாரிக்கும் உபயஞ் செய்வோர்க்கும் தரிசனத்தின்பொருட்டு வருவோர்க்கும் தங்கியுள்ள அர்ச்சகர்க்கும் பயந்து அவர்கள் செய்யத்தகாக் கருமத்தைச் செய்யச் சொன்னாலும் செய்யத் துணிவர்; இத்தன்மையுடைய ஆசாரியர் உற்சவம் நடத்துதற்கு உதவார். கோயிலதிகாரி உபயகாரர் ஏதும் பொருந்தாக் கருமத்தைச் செய்யும்படி தம்மைக் கேட்டாலும் சிறந்த குருக்களாயுள்ளவர் ஒருபோதும் அப்படிச் செய்தற்கு உடன்படமாட்டார்.

இனி, கோயிலதிகாரி யென்றிருப்பவரும் கல்விகேள்வி கோயிற் பழக்கமென்னுமிவைகளோடு சிவபக்தி யொழுக்கம் தொன்மை மறவாமை முதலிய குணங்களுஞ் செயல்களும் பூண்டவராயிருத்தல் வேண்டும்; தமக்கென்ன கேடுதான் நேரினும் சிவத் துரோகஞ் செய்யாதொழிதல் வேண்டும்; சிவத் துரோகத்திற்குப் பயப்படுவருக்குக் கேடு ஒருபோதும் வரமாட்டாதென்பது நிசம். உற்சவ உபயஞ் செய்வோரும் இடாம்பீகத்தையும் போலிப் புகழையும் விரும்பாதவர்களாய்த் தாம் செய்யும் கைங்கரியம் சிவதொண்டாகுமென்ற கொள்கை பூண்டோராய்ச் சிவபக்தி யுடையோராய்ச் செய்வரேல் அவர் செய்யும் அக்கருமம் இருமைப் பயனையுந் தரும். இங்ஙனமெல்லாம் கிரமமாக நடைபெறுமானால் மகோற்சவமும் எல்லார்க்கும் இனிதாய் நடக்கும்.

இந்த உண்மைகளையெல்லாம் அறவே மறந்து இக்காலத்துள்ள சைவ மக்களுட் பலர் திருவிழா முதலியன நடத்தத்தொடங்கியும், கோயிலதிகாரிகள் நடத்துவதற்கிடங் கொடுத்தும், உற்சவாசாரியர்கள் தாம் அவற்றை நடத்துவதாகப் பொறுப்பு வகித்தும் பெரும் அபராதங்களைச் செய்யத் தலைப்பட்டுக்கொண்டார்கள்; கணிகையர் நடனத்திலும், பல கூட்டம் மேளகாரரை வருவித்தலிலும் அதிக பணத்தைச் செலவிட்டு, ஆலயத்தில நடக்கவேண்டிய விசேஷ அபிஷேகம் பூசையென்னுமிவைகட்குப் போதிய பொருள் உதவாது உலோபஞ் செய்கிறார்கள்; பயபக்தியோடு நடத்தவேண்டிய திருவிழாவைக் கொண்டாட்டமும் உண்டாட்டுக் களியாட்டும்போல் மதித்து நடத்தத் தலைப்பட்டுக்கொண்டனர். இராக் காலத்தில் நடக்கவேண்டிய உற்சவத்தைப் பகற்காலத்திலும், அப்படியே பகற் காலத்தில் நடக்கவேண்டிய உற்சவத்தை இராக் காலத்திலும் மாற்றி நடத்தத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; மூர்த்திகளின் தியானத்திற் சொல்லப்பட்ட அமைப்பை மறந்து, அந்த மூர்த்திகளுக்குப் போலிக் கரம் கால் வைத்துக் கட்டி, ஏதோ விபரீத அலங்காரஞ் செய்து எழுந்தருளப்பண்ணுகிறார்கள்; இப்படியான அநர்த்தங்களை உபயகாரர் செய்வதற்கும், செய்வித்தற்கும் கோயிலதிகாரிகளும் உற்சவாசாரியரென்றிருப்பவரும் இடங் கொடுக்கின்றனர். காலிலே தைத்த முள்ளையெடுப்பதற்காக உபயோகித்த முள்ளும், எடுக்க முயன்றவனுடைய பிழையினால் அக்காலிற் புதைந்தவாறு; நித்திய நைமித்திகங்களில் அபுத்தி பூர்வமாக நேர்ந்த பிழையை நீக்குதற்குப் பிராயச்சித்தமாக செய்யப்படும் பெருந் திருவிழாவும் புத்தி பூர்வமாகச் செய்த பெருந் தவறுகி மேற்படி உற்சவத்திற் சம்பந்தப்பட்டோரனைவர்க்கும் இருமையுந் தீமை விளைப்பதாகின்றதே! இந்த இரகசியத்தை மேலே சொல்லப்பட்ட முப்பாலாரும் அறிந்து பயந்து அடங்கி நடக்கவொண்ணாதா?

## ஹிட்லர் இன்னும் தைரியத்துடனிருக்கிறார்

லண்டன் மார் 19

ஜெர்மன் ரேடியோ இன்றிரவு ஒலிபரப்பியபொழுது ஹிட்லர் இன்னும் வெற்றியை ஈட்டுவேன் என்ற தைரியத்துடன் பின்வருமாறு இளம் தலைவர்களுக்குக் கூறியதாக அறிவித்திருக்கிறதாம்: "இன்று நிலைமை படுமோசமாகவிருந்தாலும் இறுதியில் நாம் வெற்றியீட்டுவோம்."

இந்த இளந் தலைவரில் ஒருவர் யுத்தத்தில் டகழ்மாலை சூட்டப்பட்ட 12 வயதுச் சிறுவனென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## தேசாதிபதியின் யாழ்ப்பாண விஜயம்

வரும் மேமாதம் 30-ந் தேதியன்று எங்கள் மாட்சிமை தங்கிய தேசாதிபதி ஸேர் ஹென்றி மூர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வாரென அறியப்படுகின்றது.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர் — 44.)

### "அடாத செய்பவர் படாதபடுவர்"

வந்த வீராசாமி அங்கே கிழவியும் பாலசிங்கனும் கவலைபுடனிருப்பக் கண்டு "ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஏதும் விசேஷ முண்டோ" என்று பாலசிங்கனைக் கேட்க, 'வீரா, எவர்க்கும் வெளியிடாதே; இங்கேயொரு பிழை நடந்துவிட்டது; இரஞ்சிதத்தைக் காணவில்லை,......' எனலும் "எப்போது தொடக்கம்" என்று வீராசாமி கேட்க, பாலசிங்கன் 'சென்ற இரவு வழக்கம்போல அறையுட் போய்ப் படுத்துக் கிடந்தாளாம்; அதிகாலையிற் பாட்டி போய்ப் பார்த்தபோது காணவில்லையாம்; இவள் இலட்சுமியும் தனக்கொன்றுந் தெரியாதென்கிறாள்; இதுதான் நடந்த செய்தி" என்று கவலையோடு சொன்னான் பாலசிங்கன்: "பாலா, சென்ற இரவு நான் இங்கே வந்து போகும்போதே இப்படியெல்லாம் வருமென்று எண்ணினேன்; அந்த இரஞ்சிதத்தின் மனத்தை இந்தப்பாட்டி மிகவும் வருத்தி நடக்கத் தலைப்பட்டுக் கொண்டாள்; அவள் இப்பொழுது இந்த வீட்டை விட்டுப் போய்விட்டாளென்பது நிசம்; ஆனால், போனவள் என்ன செய்தாள், எங்கே போனாள்; தன்னுயிருக்கு இதுவரையில் ஏதும் பிழை தேடிவிட்டாளோ என்ற இவைகளைப்பற்றி ஆராய வேண்டும்; அப்படி அவள் ஏதுஞ் செய்திருந்தால் இந்தக் கிழவிக்கும் உனக்கும் தான் பேராபத்து நேரிடுமென்றறிந்துகொள்; அடாத காரியத்திற் பிரவேசிப்போருக்கு வருவது பேராபத்துத்தான்; அடாத செய்பவர் படாதபவடு ரென்பது பழமொழி; இவை கிடக்க, இந்த விஷயம் தப்போதைக்கு வெளிவந்தாற் பிழையாகும்; ஆனதால் விஷயத்தை இரகசியமாக வைத்துக்கொண்டு இரஞ்சிதத்தைத் தேடிக்காண இப்பொழுதே முயற்சி செய்யுங்கள்; நானும் என்னால் இயன்ற முயற்சி செய்கிறேன்" என அச்சத்தோடும் கவலையோடுஞ் சொன்னான் வீராசாமி; "இரஞ்சிதம் தன்னுயிருக்கு மோசம் விளைக்கமாட்டாள்; எவருடனுங் கூடிக் கொண்டுதான் போயிருப்பாளென நான் நினைக்கிறேன்......" என்று பாலசிங்கன் சொல்வதற்கிடையில், வீராசாமி "ஏன் அப்படி நினைக்கிறாய்" யென வினவலும் "எனக்கு விசுவநாதனின் மேற் சந்தேகம்; விசுவநாதனிடத்தில் இவள் அதிக விசுவாச முடையவளென்பதை அறிவேன்; அவனுடைய உதவியில்லாமல் இவள் இந்த வீட்டை விட்டுப் போக முடியாது" என்றான். "பாலா, விசுவநாதனிடத்தில் இரஞ்சிதத்திற்கு விசுவாச மிருக்கலாம்; அவனுக்கு அவளிடத்தில் நல்ல எண்ணமிருக்கலாம்; ஆனால், இரஞ்சிதம் இந்தவீட்டை விட்டு நள்ளிரவிலே ஒரு ஆடவனை மாத்திரந் துணையெனக்கொண்டு புறப்பட்டிருக்கமாட்டாள்; அப்படியல்ல வென்று [illegible] விசுவநாதன் அவளை [illegible]க்கொண்டு போதற்கு உடன்படமாட்டான்; இதில் ஏதோ கிருத்திரமம் இருக்கிறது; விரைந்து முயற்சி செய்து அறிய வேண்டுமென்று" மனத்துயரத்துடன் சொன்னான் வீராசாமி; இப்படிச் சொல்லியவுடன் பாலசிங்கனுக்கும் கிழவிக்கும் வீராசாமி மேற்கொண்ட சந்தேகம் அறவே நீங்கி விட்டது; "தம்பி, இரஞ்சிதம் காணமற் போனதையிட்டு உம்மீதுஞ் சந்தேகங் கொண்டேன்" என்று கிழவி வீராசாமியைப் பார்த்துச் சொல்ல, "பாட்டி, உடுத்த துணியிலுஞ் சந்தேகங் கொள்ளுதல் உங்கள் குலத்திற் குரிய குணந்தானே; அதை ஏன் இப்பொழுது சொல்லிக் காட்டுகிறீர்கள்" என்று கேட்டான் வீராசாமி; கிழவி யாதும் பதில் பேசாதிருந்தாள்.

### அப்படிச் செய்கிறாயா?

பின்னரும் பாலசிங்கன் வீராசாமியைப் பார்த்து "நண்பா, இந்த விஷயத்தை விசுவநாதனுக்கு வெளியிடாமல் மறைத்து வைத்திருக்க முடியாது; அவன் இன்றைக்கோ நாளைக்கு இந்த வீட்டிற்கு வருதலுங் கூடும்; மேலும் நீ எப்படித்தான் சொன்னாலும் விசுவநாதனை யறியாமல் இரஞ்சிதம் இந்த வீட்டை விட்டுப் போயிருக்கமாட்டாளென்பது என்னுடைய திர்க்கமான நம்பிக்கை; ஆனால் எதற்கும் இந்த இரகசியத்தை விசுவநாதனுக்கு வெளியிடுவதுதான் புத்தியின்பாற் பட்டதாகும்; சில காலமாக விசுவநாதன் என்னை வெறுத்து நடக்கிறான்; அவன் என்னை வந்து காண்பதில்லை; வழிதெருவிற் கண்டாலும் என்னுடன் அதிகம் பேசுகிறானில்லை; ஆனதால் நீ இப்பொழுது எனக்காக விசுவநாதனிடம் போய் இரஞ்சிதங் காணமற் போன செய்தியைச் சொல்லி அவனுடைய உள்ளக்கிடக்கையையும் அறிந்து வருவது நல்லது; அப்படிச் செய்கிறாயா" என்று இரந்து கேட்டான்; "சரி, நான் இப்பொழுதே அப்படிச் செய்கிறேன்; ஆனால்! நீ கிழவியோடு வீண் கதை பேசிக் கொண்டிருத்தலைவிட்டு இரஞ்சிதத்தைப் பற்றி ஏதும் அறிய முடியுமானால் எங்கேனுஞ் சென்று தேடியறிந்துவா; இந்த நேரத்திற் சோம்பலாயிருந்து ஏதுஞ் செய்ய முடியாது" என்று சொல்லிவிட்டு வீராசாமி உடனே புறப்பட்டு விசுவநாதன் வீட்டுமார்க்கமாகப் போனான்: அவன் போக, பாலசிங்கனும் கிழவியும் இரஞ்சிதம் வீட்டை விட்டுப் புறப்பட்டதையிட்டுப் பலவாறு யோசித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்; வீராசாமி போகும மார்க்கத்தில் விசுவநாதன் தனக் கெதிரே வரக்கண்டு, "விசுவநாதா, நான் உன்னிடந்தானே வருகிறேன் நீ எங்கே புறப்பட்டு வருகிறாய்" என்று கேட்க, விசுவநாதன் நான் வேறெங்குமல்ல, இரண்டு மூன்று தினங்களாக இரஞ்சிதம் வீட்டிற்குப் போகத் தவறினேன்; அதனால் இப்பொழுது அங்கேதான் போகலாமென்றெண்ணிப் புறப்பட்டு வருகிறேன்" என்றான்;

தொடர்ச்சி 5 ) பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கின் பெருமை

( திரு. அ. சுப்பிரமணிய பாரதி )

உலகத்தில் நாடுபடு திரவியம், காடுபடு திரவியம், மலைபடு திரவியம், கடல்படு திரவியம் என நான்குவகையான திரவியங்களுண்டு. இந் நான்கில் ஒவ்வொரு வகையிலும் மிக மிக அபூர்வமானவை யென்றும் விலையுயர்ந்தவை யென்றும் விலை மதித்திடற்கரியவை யென்றும் கொண்டாடத் தக்க திரவியங்களுண்டு.

கடல்படு திரவியங்களில் ஒன்றாகும் சங்கு. இது அத்தகைய சிறப்பனைத்தையும் உடையதாகும். சங்கம் என்ற வடமொழியே தமிழில் சங்கு என மருவியதாகத் தெரிகிறது. சங்கு பாத கண்ட வாசிகளாகிய நமக்கு மிகவும் உபயோகமானது. சங்கு தன் சம்பந்தத்தினால் மக்களுக்குத் தூய்மையையும் சுகத்தையுந் தரக்கூடிய தெய்வீக குணம் பொருந்தியதாகும். ஆகையால் அதனை நாட்டார் பூஜார்த்தமான பொருளாகக் கொண்டு ஆராதனை செய்கிறார்கள். மும்மூர்த்திகளில் ஒருவரும் காக்குந் தொழிலுடையராகிய மஹாவிஷ்ணுவினுடைய ஆயுதங்களில் (சங்கம், சக்கரம், கதை, பதமம்) சங்கமே தலை சிறந்து விளங்குவதாகும். ஆதலின் அக்காரணம் பற்றியும் பூஜார்த்தமாகப் போற்றுகின்றனர் அதனை!

பூபாரம் தீர்க்கவந்த கிருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்கிற மிகப் பெரிய சங்கமொன்றைப் போர்க்கோல அணியாகக் கொண்டனர். பாண்டவரில் ஒருவனும்நிகரற்றவீரனுமாகிய அர்ச்சுனன் தேவதத்தம் எனுஞ்சங்கைப் போர்க்கோல அணியாகக் கொண்டான்.

நம் பூர்வீக வீரர்கள் சங்கத்வனியின் மூலமாகத் தாங்கள் யுத்த ஸந்நத்தர்களான சமயத்தை ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டனர். போரில் வெற்றிபெற்றதற் கடையாளமாகவும் சங்கத்வனி காட்டி வந்தனர்.

வீரர்களுடைய ஆண்மைக்குத் தக்கபடி சங்கத்வனி ஓங்கிநிற்கும். அர்ச்சுனன் சங்கத்வனி செய்ததால் பகைவர்களின் சதிகலங்கிப் பொறிகலனொடுங்கித் திகைப்பதுமல்லாமல் பூமியும் நடுங்கிய தெனப் பாரதம் வியந்து பேசுகின்றது.

குருக்ஷேத்திர யுத்தத்தில் அர்ச்சுனன் மைந்தனாகிய அபிமந்யுவுக்குற்ற ஆபத்தைத் தெரிவிப்பதற்கு ஊதிய சங்கத்வனி அர்ச்சுனனுடைய செவியிற் கேளாதபடி கிருஷ்ணமூர்த்தி பாஞ்சசன்னியம் முழக்கினதாகப் படிக்கிறோமல்லவா?

இவ்வாறு சங்கு யுத்த காலத்தில் பலவாறாகப் பயன்படுகின்றது. சங்குகளில் வலம்புரி இடம்புரி என இரண்டு விதமான சங்குகளுண்டு. இவற்றில்வலம்புரியேசிறப்புடையது; பூசைக்குரியது. வலம்புரிச் சங்கு வீட்டிலிருப்பின் சகல நன்மைகளுமுண்டென்பது நம்மவர் நம்பிக்கை மாத்திரமு முண்டிதற்கு!

வலம்புரிச் சங்கம் மதித்திடற்கரிய விலையுடையதா யிருக்கும். இதன் அருமை யறிந்தார்கள் பலர்—பெருவிலை கொடுத்து வாங்குகின்றனர். இதனுடைய சிறப்பை—உயர்வைப் பரீக்ஷகர் மூலமாய்த் தெரிந்து கொள்வார்கள். இதனைப் பரீக்ஷிக்கும் அறிவாளிகளை நம நாட்டிலுண்டு.

தேவாராதனை செய்வதை வழக்கமாகக் கொண்டவர்களுடைய வீட்டில், மணி, தூபகால், தீபமிருப்பது போல் சங்கமு மிருக்கும். சங்கமில்லாமல் பூஜை செய்வதைச் சிறப்பாகக் கொள்வதில்லை. பூஜையின் ஆரம்பத்தில் சங்கத்தை ஓர் ஆசனத்தில் தீர்த்தத்துடன் வைத்து நக்ஷத்ரோக்தமாக ஆராதனை செய்து அதிலுள்ள தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக் கொள்வதுண்டு. பிறகு அந்த சங்கத்திலேயே ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வார்கள்.

சங்க தீர்த்தமானது பாபத்தைப் போக்கிப் பரிசுத்த மளிப்பதுடன் தேகாரோக்கியத்தையும் அளிக்குமென்பது நம்மவர் கண்ட இரகஸ்யமாதலால் அந்த அபிஷேக தீர்த்தத்தைப் பூஜை முடிவில் உட்கொள்ளுவார்கள். இன்றைக்கும் நம நாட்டில் அநேக ஆலயங்களில் 1008 சங்காபிஷேகம் நடத்துகிறார்கள் தொண்டர்கள். பட்டாபிஷேக காலத்தில் ராஜாக்களுக்குச் சங்காபிஷேகம் செய்வது வழக்கம்.

நம் நாட்டில் ஆலயங்களிலும் மடங்களிலும் பெரிய பெரிய சங்குகள் வைத்திருப்பார்கள். அவைகளுக்குத் தங்கத்தினால் பூண் கட்டியிருப்பார்கள். பூஜா காலத்தில் வாத்ய கோஷத்துடன் சங்கமும் முழக்கப்படும். அந்த சங்கத்வனி வெகு தூரம்வரையிலே கேட்கும்.

புல்லாங் குழலைப்போல் சங்கினாலும் சங்கீத இன்பம் அநுபவிப்பதுண்டு. அந்தத்வனி காதுக் கினிமையாயிருக்கும். இவ்வாறு மங்களகரமான காரியங்களுக்கே யன்றி மரணத்தையும் மரணச் சடங்கையும் அறிவிப்பதற்கு நம் நாட்டில் சங்கத்வனி செய்வது வழக்கம். வங்காளத்தில் சூரிய சந்திர கிரகணம் பிடிக்குமாயின்—அக்காலத்தில் பிடித்தது முதல் விடும்வரையில் சங்க முழக்கம் செய்வது வழக்கமாம்.

பூர்வ காலத்தில் சங்கினால் வளையல் போதிரம், மார்பில்தரிக்கத்தக்க மணிகள்—எல்லாம் செய்யப்பட்டு வந்தன. மணமகள் சங்கு வளையலை அணிந்துகொண்டுதான் விவாகச் சடங்கில் மணமகனுடன் மேடையில் உட்கார வேண்டு மென்கிற விதியுமிருந்தது. ஆகையினால் சங்கினால் வளையல் முதலியவை செய்து விற்பவர்கள் பலர் அக்காலத்தில் பெருகியிருந்தனர்.

சங்கினால் செய்யப்பட்ட மோதிரத்தைப் பலர் விரும்பி அணிந்துகொள்கின்றனர். தெலுங்கு நாட்டிலே வசிக்கும் காஜுல பலிஜர்கள் என்ற ஜாதியார் சங்கினால் வளையல் செய்து வியாபாரம் செய்துவந்தார்கள். அவர்களே இப்போது கண்ணாடி வளையல் வியாபாரம் செய்கிறார்கள். கண்ணாடி வளையல் மிகவே சங்கு வளையல கிடைப்பதரிதாய்விட்டது.

நம் தமிழ் நாட்டில் சங்கறுக்குந் தொழிலிலே ஈடுபட்டுழைத்து வந்தவருள்—மதுரைக் கடைச்சங்கப் புலவரில் ஒருவராய் விளங்கிய நக்கீரர் ஒருவர் எனபது,

சங்கறுப்ப தெங்கள் குலம் சங்கரர்க்கங் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வோ மரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வோ மிலை.

என்ற செய்யுளால் இனிது விளங்குவதாம்.

நக்கீரர் பரவர் குலத்தைச் சார்ந்தவர். முருகப் பெருமானிடம் அன்பு கொண்டு திரு முருகாற்றுப் படை என்ற அரியநூலை இயற்றியுதவியவர்.

திருநெல்வேலி ஜில்லாவில் இந்தத் தொழில் மிகுதியாக நடந்துவந்ததாகத் தெரிகிறது. உமசூர்பல்லாரி, குண்டூர், அனந்தப்பூர், கர்நூல், கிருஷ்ணா—இப் பக்கங்களில் இந்தத் தொழில் [illegible] நடு [illegible] அவர்களின் அங்கங்கே கண்டெடுக்கப்படும் சங்கு வளையல்களின் துண்டுகளினால் நமக்குப் புலனாகிறது.

குழந்தைகளுக்குப் பாலோ மருந்தோ புகட்டுவதற்கு நானிக்கும் அநேக ஏழைகளின் வீடுகளில் சங்குப் பாலடையே உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. சங்கின் சம்பந்தமடைவதால் பாலும் மருந்தும் கெடுதியடையாததுமல்லாமல் தேகாரோக்கியத்துக்கேற்ற தன்மையையும் சங்கினிடமிருந்து அடைவதாகத் தெரிகிறது. சங்கையரைத்து முகப்பருவுக்குப் போடுவதுமுண்டு. சங்கினாலாகிய மோதிரமணிந்த கரஸ்பரிசத்தால் மூல நோயின் காரணமாக ஆசனத்திலுண்டாகும் முளையைக் கருதி சம்பந்தமான சிகிச்சையிலலாமலே குணப்படுத்தலாமென்று ஆயுர்வேத வைத்யர் கூறுவதுண்டு. அதறிந்த பலர் அந்த முறையை அநுஷ்டித்து வருவதைக் காணலாம்.

அன்னிய தேச சங்குகளைவிட இந்தியா தேசத்திற் கிடைக்கும் சங்குகளே கெட்டியான வெள்ளை மேலோட்டையுடையன வென்று கூறுவார்கள். சங்குப் பூச்சிகளில் மிகப் பெரியது நான்கங்குலச் சுற்றளவும் எட்டு முதல் எட்டரையங்குல நீளமுமுடையதா யிருக்குமென்று சொல்கிறார்கள்.

வருஷந்தோறும் கடல்களிலிருந்து எடுக்கப்படும் சங்குகள் சராசரி $1\frac{1}{2}$ அல்லது 2 லட்சம் ரூபாவுக்கு மதிப்பிடத் தக்கவைகளா யிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வங்காள ராஜதானியில் சங்கினொட்டினால் வளையல் செய்யும் தொழிற் சாலைகள் பல இருக்கின்றன, அவ்விடத்துக்குச் சங்குகள் அனுப்பப்படுகின்றன. வியாபாரிகள் சங்கு கிடைக்கும் கடற் பிரதேசங்களைக் குத்தகைக்கு எடுத்து ஏராளம் சம்பாதிக்கிறார்கள்.

கடற் கரையோரத்திற் சங்குப் பூச்சிகள் மணற்பாங்கான இடத்திற் சஞ்சரிக்கும் சிறு கடற் பூச்சிகளைத் தின்று வாழ்கின்றனவாம். ஆதிகாலத்தில் திராவிடர்களே சங்கைக் கையாண்டு வந்ததாக ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள், முதலுக்களோடு சங்குகளும ஈஜிப்ட் முதலிய பிறநாடுகளுக்கு அக்காலத்தில் ஏற்றப்பட்டு வந்ததாகவும் தெரியவருகிறது.

இப்போது சங்கினால் வளையல் செய்வதுமல்லாமல் — கழுத்தில் அணிந்து கொள்ளத்தக்க அணிகலன்களும்செய்யப்படுகின்றன. சங்குகளிலே பலவகை யுண்டல்லவா? அவையெல்லாம் சுத்தமாக்கிக் கடையப்பட்டபின் ஒன்றைவிட ஒன்று அழகாயிருக்கும்,

கடல்படு திரவியங்களில் முத்தும் பவளமும்—நல்ல விலையுயர்ந்த பொருள்களா யிருப்பதுபோல் சங்கின் விசேஷமறிந்தவர் சங்கையும் மதித்து அதன் பயனை அநுபவிப்பர்.

இவ்வாறு நம்தேசத்தில் பல அபூர்வமான பொருள்களுண்டு. கவனித்து அவ்வப் பொருளால் அடையத்தக்க பயனை அடையப் பாடுபடுவதே மதியாகும். மக்கள் தங்கள் அறிவைக் கொண்டு தேடிக்கொள்ள வேண்டிய நன்மைகளை அவர்கள் கவனக் குறைவினாலே இழக்கின்றனர். கவனிப்பின் ஓர் அற்ப அணுவும் பூவலினும் பயன் பெறலாம். மேனாட்டார் நம்மவர்போலல்லாமல பொருள்களைப்பற்றி ஆராய்ந்து பார்த்து—உழைத்துப்பயனடைகிறார்கள். அந்த ஊக்கம நம்மவரிடமும் மிகவேண்டும். அப்போதுதான் நாடு உயர்வடையும். அடிமைப் பிழைப்பு நீங்கும். —ஆனந்தபோதினி

கடல்படு திரவியம் — அக்கு, உப்பு, சங்கு, பவளம், முத்து.

நாடுபடு திரவியம்—கரும்பு, சிறுபயறு, செந்நெல், செவ்விளநீர், வாழை.

காடுபடுதிரவியம்—அரக்கு, கருந்தினை, [illegible] மயிற்பீலி.

மலைபடு திரவியம்—மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### வெள்ளி மார்ச் 23

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வீணை, கோட்டுவாத்திரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சாரதா அனந்தராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அம்மா சத்திரம் ஆர். ராமசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 அம்மாசத்திரம் ஆர். ராமசாமி பாட்டு 5-40 குரான்-ஷரீப் விளக்கம் 6 சாரதா அனந்தராமன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6.40 கிராமநிகழ்ச்சிகள் 7.15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 இணைவாத்தியஇசை† 7-45 தமிழில் செய்திகள் 8 புதுக் குடித்தனம் தொடர் சித்திரம் 8-15 செம்பொன்னார்கோயில் கோவிந்தசாமி பிள்ளை நாகஸ்வரம் 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

### சனி மார்ச் 24

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வி வி சடகோபன்† 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 காலை இசை† 9 முடிவு.

1 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பியசங்கீதம் 2 தமிழில் செய்திகள் 2-05 எம் ஆர் வாஸவாம்பாள் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 திருப்பாப்புலியூர் ஆர் வெங்கடராமய்யர் வயலின் 5-40 சம்பந்தர் தேவார விளக்கம் 6 எம் ஆர் வாஸவாம்பாள் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 விடுதலை போரில் பிரிட்டன் பங்கு 7-30 அறிவிப்புகள் 7.25 வாணி† 7-45 தமிழில் செய்திகள் 8 மதராசில் உள்ளபடி 9-20ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஆ இ ரே வித்வான் புல்லாங்குழல் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### ஞாயிறு மார்ச 25

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வயலின், பியானோ, கிளாரினெட்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பெண்மை 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1.30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 மாதர்பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 இசைவகை† 2-30 முடிவு.

மாலை: 5 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 5 40தேவாராதனை 6 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-10 நாளையதூசியா 7-30 அறிப்புகள் 7-35 மன்மதன்வரவு† 7.45 தமிழில செய்திகள் 8 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ண பிள்ளை பாட்டு 9 சர்வகலா சாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்திலசெய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 தோணிபுரம் பாடல்கள் 10 இசைவேளை 10-30 முடிவு.

### திங்கள் மார்ச் 26

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில செய்திகள் 8 திருவிளையாடற் புராணம் 8 15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாயவரம் கே என் பக்கிரிசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 நாகபட்டணம் பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 நாராயணஐயங்கார் கோட்டு வாத்தியம் 6-15 இலக்கியவாசகம் 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புதிய வெளியீடுகள்† 7-30 அறிவிப்புகள் 7-35 செய்திச்சித்திரம் 7-45 தமிழில செய்திகள் 8 கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் 9-15 வம்பு வேண்டாம் 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 விடுதலை தத்துவம் ஆங்கிலம் 10 இசை வேளை 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினா வெண்பா

(திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை)

வினா வெண்பா என்பது உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்தசித்தாந்த அஷ்டகத்திலொன்றும் தமது ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரை விளித்துக் கேட்கும் வினாக்களை வெண்பா யாப்பில் கொண்டது. பல சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவது. அருணந்தி சிவாசாரியரின் இருபா இருபஃதைப்போன்றது. 13 வெண்பாக்களாலாய ஓர் சிறு நூலாகும். இவ்வெண்பாவின் பொழிப்பையும் கருத்தையும் ஒவ்வொன்றாக எடுத்து விளக்கிக் காட்டுவாம்:

நீடுமொளியும் நிலவுயிருளு மோரிடத்துக்
கூடலரிது கொடுவினையேன்—பாடி
தன்மூன்
றின்றவா சேரலுயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ, 1

ஒளியும்இருளும் ஓரிடத்திலில்லா. அஃதேபோல் பாபியாகிய என்னிடத்தே மருதூர்ச் சம்பந்தா நீ சேர்ந்திருந்ததெப்படி?

ஆசிரியர் தமக்குச் சற்குரு தரிசனம் கிடைப்பதற்கு முன்னிருந்தநிலையைக் கூறுகின்றார், குரு தரிசனம் கிடைத்ததும் தம்மைப் பிடித்திருந்த மலம் அவரைவிட்டு விலகியது. தரிசனத்திற்கு முன் இறைவன் அவர் ஆன்மாவோடு சேர்ந்து விளங்கியும் அவருக்கு யாதொரு பிரயோசனமும் இல்லை. ஏனென்றால் அப்போது ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் நடுவே பாசமானது திரைபோல் மறைத்தது. இம்மறைப்பு எதுபோன்றதென்னின் படலத்தால் பாதிக்கப்பட்ட கண்ணானது எப்படி எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சூரிய வெளிச்சத்தைப் பார்க்கமுடியாதோ அதுபோல என்றபடி.

இருளி லொளிபுரையு மெய்துங்க
லாதி
மருவி னிலையருளு மானுங்—கருவி
யிவை
நீங்கினிருளாகிறைமருதச்சம்பந்தா
எங்குன னருளா லென்பெற. 2

இருளில் ஒளி நீங்கும். கலாதிகள் பொருந்தினபோதும் துன்பம் நீங்கவில்லை. கருவிகள் நீங்கின காலத்தில இருள் மீண்டும் சூழ்ந்துகொண்டது. மருதச் சம்பந்தரே உமது அருள் பெறுமம் பயனிலதென்றபடியாம்.

ஆன்மாவின் பல அவஸ்தைகளிலும் இறைவன் அருள்சக்தியினாகத முறுகின்றது. சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம் முதலிய கிருத்தியங்களை நடத்துகின்றன. கடவுள் நம்மோடு எப்போதும் விளங்குகின்றார், அவர் எம்மோடு உடன் உறைந்து யாம் உணர்ந்தோர் நமது ஆணவத்தை அவருக்கு அர்ப்பணஞ் செய்தால் அப்போதுதான் அவருடைய சுத்த கல்யாணப் போகத்தை யாம் பெற ஏதுவாயிருக்கும் என்பது இந்நூலின் பொருள்.

புலனறிவு ணுணர்வு தாதர்
பொதுஞான
மலைதில் துள்ளிதனி லெங்கியமாக
—தொல்லுயிருள
ஊன மட்டாவா றுயர்மருதச் சம
பந்தா
ஞான மலேயாவாய் நவில், 3

சிற்றறிவு பூரண வுணர்ச்சியாகாதெனபது எல்லோருக்குந் தெரிந்த பொது ஞானம். அப்படிப் பூரண உணர்ச்சியொன்று புகுதற்கு உண்டானாலும் அது உண்மையாக இராது. குற்றந்தனிலே மருவுந் சம்பந்த முனிவரே! மல்லோனை ஞானத்தை உடையவரே! கூறுவீராக என்பதாம்.

ஆன்மாவின் அறிவு சிறியதுமன்று குறையுடையதுமன்று. அது வளர்ச்சி பெறுவதுமில்லை, குறைவற்று நிறைவாவதுமில்லை. ஒருபக்ஷத்தில் அது நிறைவுடையதே. ஆனால் ஆன்ம அறிவு ஆணவ மலத்தால் மூடப்பட்டுள்ளது. சுத்தஞ் செய்யப்பட்ட பளிங்கு அழுக்கால் மறுபடியும் மூடப்படுவது போல பளிங்கிலுள்ள அழுக்கைப் போக்கினால் தானும்பிரகாசிப்பதோடு வேறு ஒளியையும் ஊடுருவிச் செல்லும்படி செய்கின்றது. அழுக்கால் மூடப்பட்டுள்ளபோது இந் நிகழ்ச்சிகள் உண்டாவதில்லை. இஃதேபோல சிவஞானமானது ஆன்ம அறிவுமன்று; ஆன்மா புத்துணர்ச்சி பெற்றபிறகு நூதனமாக உண்டானதுமன்று.

கனவு கனவென்று காண்பரிதாங்
காணின்
நனவி லவைசிறிதுமன்று—முனை
வனருள்
தானவற்றி லொன்று தடமருதச்
சம்பந்தா
யானவத்தைக் காணுமாறென. 4

கனவிலே நின்று கனவு இன்னதென்பதைக் காணமுடியாது. நனவில் கனாக் காட்சியைத் தொடர்ந்து செல்ல இயலாது. இறைவனருளாற் காணலாமென்றால் அவஸ்தைகளோடு அருள் பொருந்தாது. அவஸ்தைகளை யான் எப்படிக் காண்பது கூறுவாயாக

எண்ணம் இன்னதென்பதை ஒருவன் ஊகிக்கமுடியாது. ஆனால் அவன் சுத்தநிலையை அடைவானேயாகில் அப்போது அறியலாம்.

அறிவறிந்த தெல்லா மசத்தாகு
மாயின்
குறியிறந்த நின்னுணர்விற் கூடா
—பொறிபுலன்கள்
தாமாவறியா தடமருதச் சம்பந்தா
யாமா றறிவா ரினி, 5

அறிவால் அறியக் கூடியவையெல்லாம் அசத்தாமாயின், வாக்கு மனத்திற்கெட்டாத உன்னை யான் அறிவது கூடாது. பொறி புலன்கள் தாமாக அறியக்கூடியவையல்ல. ஆதலால் சம்பந்தா யான் யாரை எப்படிக் காண்பது.

நாம் காண்பதெல்லாம் காட்சிப் பொருளேயாம். காட்சிப் பொருள் காணும் பொருளைக் காணமுடியாது யாம் கடவுளைக் காண்பதுண்டானால் அவர் காட்சிப்பொருளாகின்றார்; இது கூடாத காரியம், ஏனெனில் அவரே உண்மையாகக்காண்பவர். நமது எண்ணங்களுக்கு முதல்வர். "அவரால் எல்லாவற்றையும் அறியும் ஆன்மா அவரை எப்படி அறியக்கூடும்? காண்பவரை எப்படிக் காண்பது!" என்பவை பிருகதாரணிய உபநிடத வாக்கியங்கள்.

"கண்ணுக்கு உள்ளொளியாய் விளங்குபவனாகக் காணமுடியாது. காதுக்குள்ளே ஒலியாய் விளங்குபவரைப் பற்றிக் கேட்கமுடியாது. உணர்ச்சிக்கு உணர்ச்சியாய் இருப்பவரை உணரமுடியாது. அறிவுக்கறிவாய் விளங்குபவரை அறியமுடியாது. இப்பொருள்தான் ஆன்மாவுக்கான்மாவாய எல்லா உயிர்களிடத்தும் உள்ளது. இப் பொருளைத்தவிர ஏனையவையெல்லாம் அசத்தானவை."

(பிருகதாரணியம்)

"அவன் மனோசாசுஷமானது. சொற்களால் எடுத்துக் கூறப்படாதது. அவன் அருளாலேதான் அவனை மனிதன் காணலாம்."

(தைத்திரியம்)

"பற்றற்றவன் அவனை அவன் அருளாலே காணலாம்" (சுவேதாசுவேதரம்)

(வரும்)

# வாழ்க்கையும் விஞ்ஞானமும்

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.

மயிலைத் தமிழ்ச் சங்கத்திற் செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியது:

(முற்றொடர்)

கலையுணர்ச்சி பெற்றவர்கள் விஞ்ஞான விஷயங்களைத் தமக்கு உரிமையாக்கிக்கொண்டிருப்பதைப்போலவே விஞ்ஞானிகளும் கவிதை முதலிய கலைத்துறைகளைத் தங்களுக்கும் உரிமையாக்கிக்கொள்ளுகிறார்கள். சிறந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் தாம்சோதித்தறிந்த உண்மைகளை மீண்டும் மீண்டும் சிந்தித்துத் தெளிவடைகிறார். அவை எத்தனை சிக்கலான விஷயங்களாயிருந்தபோதிலும் அவற்றை நுட்பமாகவும், துல்லியமாகவும், தெளிவாகவும் கவனித்து விவரிப்பதே ஆராய்ச்சியாளருக்கு இயற்கையாகி விடுகிறது. இக்காரணத்தாலும், அவருடைய மனதில் தெளிவு உள்ளபடியாலும், அவருடைய நடையிலும் தெளிவு ஏற்படுகிறது. தாம் புதிதாகக் கண்டுபிடித்த உண்மையின் பெருமையையும், அதன் சிறப்பியல்புகளையும் அவர் நன்கு உணர்ந்தவராகையால், அவருக்கு அதனால் உண்டாகும் உவகையினாலும், உணர்ச்சி வேகத்தினாலும் அவருடைய நடையிலும் ஓர் உயர்வும், ஒழுங்கும், கவிதைத் தன்மையும், கருத்தழகும், செம்மையும், மற்றவும் நிறைந்து தோன்றுகின்றன. நமது நாட்டிலே ஸர்: ஸி. வி. ராமன் இதற்கு ஒரு சிறந்த சான்றாகக் காட்டலாம். அவர் பேசும்பொழுதெல்லாம் அவருடைய மனம் முழுவதையும் நிறைத்துத் ததும்பிக் கொண்டிருக்கும் விஞ்ஞான உணர்ச்சியானது, 'செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய' சொற்களின் பிரவாகமாக வெளிவருகிறது. ஒலியின் நுட்பங்களையும், ஒளியின் தத்துவங்களையும், பொருளின் அமைப்பையும் பற்றி அவர் செய்துள்ள ஆராய்ச்சிகளைக் குறித்து அவர் விரித்துக் கூறுகையில் தாளக் கருவியாகிய மிருதங்கத்தின் நாதத்திலே கேட்கும் இனிமையையும், மயிலின் தோகையின் சிறகுகளில் தோற்றும் அழகையும், ஒளி வீசும் வைரத்தின் சுந்தரத்தையும் அவர் வருணிக்கக் கேட்கிறது. அப்போதெல்லாம் அவர் ஒரு கவிஞராகவே தோன்றுகிறார்.

மனோபாவமின்றி விஞ்ஞானமும் இல்லை. பிரபஞ்சம் தோன்றுவதையும் அழிவதையும் தன்னுடைய கற்பனைக் கண்களாலேயே வானசாஸ்திரி காண்கிறான். அணுவின் அமைப்பிலே பிரபஞ்சத்தின் பெருமையைப் பௌதிக சாஸ்திரி தன்னுடைய மனக் கண்ணினால் கண்டு மகிழ்கிறான். பிரபஞ்சத்தை ஊடுருவும் பல்ரெண்டகன் கிரணங்கள் என்று சொல்லப்படுகின்ற காஸ்மிக் கிரணங்களை மனக் கண்ணாலன்றி எவ்வகைக் கருவியாலுங் காண இயலாது. எண்ணிறந்த பொருள்களை இயற்றித் தரும் இயற்கையிலும் காணாப் புதுப் பொருள்களை மனோபாவத்தின் திறத்தால் விஞ்ஞானி இயற்றுகிறான். புதிய சுவைகளையும், மணங்களையும், நிறங்களையும் இன்னும் இவை போன்ற பிறவற்றையும் இரசாயனி சிருஷ்டிக்கிறான். உலகத்திலே கடலின் கீழ்மறைவதையும், காடுகள் அழிந்து கரியாகிப் புதைவதையும், மலைகள் உயர்ந்து எழுந்து அழிவதையும் பூதத்துவ சாஸ்திரி தன்னுடைய கற்பனைத் திறம் படைத்த மனத்தால் கண்டு நன்கு தெளிவாக எடுத்துக் கூறுகிறான். இவ்வாறே விஞ்ஞானத்துறை ஒவ்வொன்றிலும் அவ்வாறு மனோபாவமும் ஒத்துழைத்தலைக் காணலாம்.

கவிதை மனத்தோடு விஞ்ஞான விஷயங்களை வருணிப்பதும் விவரிப்பதும் இயல்பேயாயினும் மனோபாவம் சேர்ந்து காணக்கூடிய விஞ்ஞான நிகழ்ச்சிகளைச் சோதித்து அறியலாகாது, உள்ளதை உள்ளபடி காண முயலுவதே ஆராயும் விஞ்ஞானியின் தொழில். சோதனைகள் நிகழ்த்தி, விஷயங்களின் உண்மைகளைக் காண முயலும்போது, கற்பனை என்பது உதவவே உதவாது, இவ்வாறு நடப்பது எளிதான காரியமன்று. 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' ஆவதுபோலவே, காதலர்கள் கண்ணுக்கு எல்லாம் அழகு; பக்தன் கண்ணுக்கு யாவும் தெய்வம். புறக்கண்ணானது ஒன்றைக் காட்டியபோதிலும், அக்கண் மற்றொன்றைக் காணுவது சாமானியர்க்கெல்லாம் பொதுவாக உள்ள இயல்பு. புறக்கண்ணுக்கு முட்செடியானது வெறும் முட்செடியாகவே தோன்றுகிறது; கவியின் அகக்கண்ணுக்கு அது நரைமயிர் செறிந்த கிழவனாகத் தோன்றுகிறது. அலமாரியின் பின்புறமாய் ஒளிந்தோடும் ஒரு சுண்டெலி கவிமனம் படைத்த சிறுமியின் கண்ணுக்குச் சின்னஞ்சிறிய வடிவுடைய தேவதையாகத் தோன்றுகிறது; ஆனால் தாயின் கண்ணுக்கு அது அற்பச் சுண்டெலியாகவே காட்சியளிக்கிறது.

இவைப்போன்ற மனோபாவக் கலப்பின்றி, நினைப்பதைக் காண்பதே விஞ்ஞானியின் பண்பட்ட மனத்தின் இயல்பு, ஆயினும் உள்ளவற்றை உள்ளபடி விஞ்ஞான முறையாற் கண்டபிடித்த பின்பு, அவற்றைத் தொகுத்து, ஒழுங்குபடுத்தி, அவற்றினின்று யாவற்றுக்கும் பொதுவான உண்மைகளை ஊகித்தறிவதற்கும், உண்மைகளோடு முரண்படாக் கொள்கைகளை அமைப்பதற்கும் சிறந்த மனோபாவம் இருந்தாலன்றி முடியாது. அறிவோடொத்ததாய், உண்மை நெறியினின்று நீங்காததாய் உள்ள கற்பனையே விஞ்ஞானி செய்யும் கற்பனை. கெப்லரும், நியூட்டனும், ஐன்ஸ்டீனும், போர், ஜீன்ஸ், ராமன் முதலியோரும் செய்துள்ள கற்பனைகள் ஆராய்ச்சியிற் சிறந்த இவர்கள் கவிமனமும் படைத்தவர்கள் என்பதை நன்றாக விளக்குகின்றன. (தொடரும்)

—செந்தமிழ்.

## ஐக்கிய சங்கங்களுக்கு அறிவித்தல்

ஐக்கிய சங்கங்களின் பரிபாலனம் சம்பந்தமாகக் "ஐக்கிய முன்னேற்றம்" என்னும்ஒரு புதியகந்தோர் ஸ்தாபிதஞ் செய்யப்பட்டிருக்கிறது. இப்புதிய கந்தோருடன் ஐக்கிய சங்கப் பதிவு காரியஸ்தரின் கந்தோரும் நிலைத்திருக்கும்.

புதிய கந்தோரிலுள்ள வேறு பல வேலைகளுடன் ஐக்கிய மொத்தப் பண்டசாலைகளின் பராமரிப்பையும் தாங்கியிருக்கும். ஆகவே, இலங்கை முழுவதுமுள்ள சகல ஐக்கிய மொத்தப் பண்டசாலைகளுக்கும் பொது ஆதவுவது இப்புதிய கந்தோரைப் பொறுத்ததாயிருக்கும்.

இனிமேல், ஐக்கிய பண்டசாலைகளுக்குப் பொருள்கள்பெறுவது சம்பந்தமான சகல கடிதங்களும் "கோவோ பெறேற்டிவ் டிவெலொப்மன்ற்" தபால்பெட்டி 444 கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதப்படல் வேண்டும்.

ஆயின், ஐக்கியசங்கப்பதிவு, வளர்ச்சி, முதலியன யாவையும் பற்றிப் பதிவு காரியஸ்தருக்குக (Registrar) கடிதம் எழுத வேண்டும்.

ஜீ. டீ. சொய்ஸா,
ஐக்கிய முன்னேற்றக் கொம்மிஷனர்.

G 126, 19 & 22-3-45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

"இரஞ்சிதம் உன்வீட்டி லிருக்கக் கூடுமோ என அறிந்துகொண்டு போவதற்காகத்தான் இப்படிப் பறப்பட்டு வருகிறேன்" என்று வீராசாமி சொல்ல, "வீரா, உனக்கு எந்த நேரமும் பரிகாசந்தானே" என்றான் விசுவநாதன்; "நான் சொல்வது பரிகாசமல்ல நிசந்தான் விசுவநாதா, என்னை நம்பு" என்றான் வீராசாமி; இதனைக்கேட்ட விசுவநாதன் திடுக்குற்றான்; சித்தங் கலங்கினான்; சிறிது நேரம் யோசித்தான்; "இரஞ்சிதத்தை எப்போது தொடக்கமாகக் காணவில்லை" என்று விசுவநாதன் கேட்க, "சென்ற இரவு தொடக்கம் காணவில்லையாம்" என்றான் வீராசாமி; "பாலசிங்கன் இப்பொழுது எங்கே" என்று விசுவநாதன் கேட்க, கிழவி வீட்டிலே தான் இருக்கிறாள் என்றான் வீராசாமி; கிழவி இதைப்பற்றி என்ன சொல்லுகிறாள்? என்ன செய்கிறாள்? என்று விசுவநாதன் கேட்க, "கிழவி அவள் சாணுமல் யாருடனோ கூடிக்கொண்டு போய்விட்டாள் என்று சொல்லிவிட்டுப் பாலசிங்கனுடன் பலவாறு யோசித்துக் கொண்டிருக்கிறாள் என விடை சொன்னான் வீராசாமி; "கிழவிக்கும் இரஞ்சிதத்திற்கு மிடையே யாதும் பிணக்கு நேர்ந்திருக்கக் கூடுமோ" என்று விசுவநாதன் கேட்க, நேர்ந்தது நேராததைப் பற்றி எனக்கெப்படித் தெரியும்; அதையிட்டுக் கிழவியை இல்லையேல் இரஞ்சிதத்தை யல்லவா விசாரிக்க வேண்டும்" என்றான் வீராசாமி "வீரா, இரஞ்சிதம் காணுமற் போனதையிட்டு நீ என்ன நினைக்கிறாய்" என விசுவநாதன் கேட்க "நான் ஒன்றும் நினைக்கவில்லை" யென்றான் வீராசாமி; "சிநேகிதா, வேடிக்கை பண்ணுதே; நீயும் நானும் நாலு நாளாயினும அவளுடன் கண்டு பேசிப் பழகினோமல்லவா; பாவம்! அவளைச் சடுதியிற் காணவில்லை யென்றால் உன் மனஞ் சஞ்சலமுறுதா; என்மனம் கிலேச மடையாதா; பேயோடு பழகினும் பிரிதல் அரிதென் றல்லவா சொல்லுவார்கள்; அவள் தனித்தவள்; எங்கே போனளோ, எந்தத் துஷ்டர் கையிற் சிக்கினளோ, இல்லையேல் தன் மானத்தைப் பாதுகாக்க வேண்டி உயிரை மாய்த்தாளோ, ஒன்றுந் தெரியவில்லையே......என்று சொல்லிக் கவலைப்பட்டான் விசுவநாதன்; "விசுவநாதா, இரஞ்சிதம் புத்தியுள்ள பெண்; முந்தியே பல கஷ்டங்களையும் அனுபவித்தவள்; தெய்வ நம்பிக்கை யுடையவள்; கதிர்காமத்திற்குப் போய் முருகையனைத் தரிசனஞ் செய்ய வேண்டுமென்ற வைராக்கியம பூண்டவள்; ஆனதினுலே அவளுக்கு எவ்வகையான இடையூறும் நேராதென்பதை நம்பு; உனக்கும் பாலசிங்கனுக்கும் படித்தும் புத்தியில்லை; நடவாததை நடந்ததென் றெண்ணிக் கவலைப்பட்டுப் புலம்புகிறாய்; கதிர்காமத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறேன், கூட்டிக்கொண்டு போகிறேன் என்று அந்தக் கிழவி ஏமாற்றியமையினாலேயே இரஞ்சிதம் மனவெறுப் படைந்து கிழவியிருக்கும் வீட்டைவிட்டு எவருமறியாதபடி போய்விட்டாள்; அத்தத் தலத்திற்கு யாத்திரை செய்யும் சாதுக்களுடன் அவள் இரகசியமாக முந்தியே ஒழுங்கு செய்துகொண்டு சென்ற இரவு அவர்களுடன் கூடிக்கொண்டு போயிருக்க வேணுமென்றுதான் நான் நினைக்கிறேன்; இரஞ்சிதம் தற்கொலை செய்திருப்பாளென நான் நினைக்கும் போதெல்லாம் பல்வித்தடை யுண்டாகிறது; இரஞ்சிதத்தை நானும நீயும் தேடிக் காணத்தான் வேண்டும்; கண்டாலும் அந்தக் கூனிக்கும் பாலசிங்கனுக்குஞ் சொல்லக்கூடாது" என்று சொல்லி வீராசாமி விசுவநாதனைத் தேற்றினான்; இவைகளை யெல்லாங் கேட்டுக்கொண்டு நின்ற விசுவநாதன் வீராசாமியினுடைய புத்தித் திறத்தை மெச்சினான்; "சிநேகிதா, நீ சொல்வது நிச்சயமாய்த்தா னிருக்கவேண்டும்; இரஞ்சிதம் ஒருபோதுந் தன்னுயிருக்கு மோசஞ் செய்யாள்; அவள் தற்கொலை செய்தல் பாவமென்று எனக்கே பலமுறை சொல்லியிருக்கிறாள்; ஆனதாற் பயமில்லை; இரஞ்சிதத்தை நானுந் தேடிக் காண முயற்சி செய்கிறேன்; நீயும் அப்படிச் செய்" என்றான் விசுவநாதன்.

### அன்பற்றார் வாசலிலே
### பின்பற்றிச் செல்லாதே

"அப்படியே செய்கிறேன்; அது நிற்க, அந்த வீட்டிற்கு இப்பொழுது நீ என்னுடன் கூடிக்கொண்டு வருகிறாயா" என்று வீராசாமி கேட்க விசுவநாதன் "அங்கே எதற்காக? அந்த மந்தரையையும் பாலசிங்கனையுந் தரிசிப்பதற்கா" என்று சொல்ல, "மந்தரை யென்றால் ஆர்" என்று கேட்க, "இராமருடைய பட்டாபிஷேகத்தைக் கோள்மூட்டிக் குழப்பினளே அந்தக் கூனி, அவளைத்தான மந்தரை யென்று சொல்லுவது; இங்கே அந்தக் கிழவியைச் சொன்னேன்; இரஞ்சிதம் இல்லாதபோது நான அந்த வீட்டு வாசற்படியிலும் அடியெடுத்து வைக்கமாட்டேன்; அல்லாமலும் அந்தக் கிழவியும பாலசிங்கனும் என்மேற் சந்தேகப்படுவார்கள்; அன்பற்றார் வாசலிலே பின்பற்றிச் செல்லாதே யென்று உலகத்திலே சொல்லுவார்களல்லவா; நான் ஒருபோதும அந்த வீட்டிற்கு வரமாட்டேன்; வேணுமானல் நீபோய் விசுவநாதனுக்கு இரஞ்சிதம் போனதையிட்டு யாதும் எனக்குத் தெரியாதென்று சொல்லிவிடு; அவர்கள் நம்பப் பிரியமானால நம்பலாம்; இல்லையேல் விடலாம்" என்று விசுவநாதன் சொல்ல, "நீ சொல்வது ஞாயந்தான்" எனச் சொல்லி வீராசாமி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு மீள, விசுவநாதனுந் தன் வீட்டை நோக்கி மீண்டு போவானாயினன். வீராசாமி தனக்கும் விசுவநாதனுக்கு மிடையே நடந்த வரலாறு முழுவதையும் கிழவிக்கும் பாலசிங்கனுக்குஞ் சுருக்கமாகச் சொல்லி, "விசுவநாதன் மீது சந்தேகங் கொள்ளுதல் தப்பாகும்" எனவுங் கூறி முடித்தான்; இருவரும் கேட்டு மிகவுங் கவலைப்பட்டார்கள்.

### "ஆருடங் கேட்போம்"

கிழவி இராக்கவலை கொண்டாளாய்ச் சிறிதுநேரம் சிந்தித்துவிட்டுப் பின்னர்ப் பாலசிங்கனைப் பார்த்து "தம்பி, எனக்கொரு புத்தி புலப்படுகிறது; அயலூரிலே கோவிந்தசாமியென்று ஒருவனிருக்கிறான்; அவன் அஞ்சனம் பார்த்து 'வைத்தான் வைத்தபடி' எந்த இரகசியத்தையும் உணர்ந்து சொல்லக் கூடியவன்; அநுமாரை நன்கு உபாசித்திருப்பவன்; அவனை, ஒரு ஆளனுப்பி இங்கே கூப்பிடுவித்து அஞ்சனம் பார்ப்பித்து அறியலாமென்று நினைக்கிறேன்; அதற்கு வேண்டிய பொருள் பண்டம் எல்லாம் நான் ஆயத்தப்படுத்தி வைக்கிறேன்; அப்படிச் செய்து பார்ப்பது உங்களுக்குஞ் சம்மதந்தானே" என்று பாலசிங்கனைக் கேட்டாள்; "அஞ்சனம் பார்ப்பதில் எனக்கு நம்பிக்கை யில்லை; முன்னொருபோது என்னுடைய மோதிரத்தைக் கண்டு பிடித்து எடுத்துத் தருகிறேன் என்று சொல்லி அநுமாருக்குப் பெரிய "மடை" இட வேண்டுமெனத் தெரிவிக்க நான் நிசமென நம்பி, அவன் சொன்ன சொன்ன பொருள்களை யெல்லாம் அதிக பணஞ் செலவிட்டுத் தேடிச் சேர்த்து மடையிட்டேன்; அநுமார் அடகே தோற்றுகிறார்; இங்கே வருகிறார்; இன்னவீட்டுக்குள்ளேவுட்பிரவேசிக்கிறார், எங்குந்தேடிப்பார்க்கிறார் என்று முதற் சொன்னான்; நானும் அவன் சொல்வதெல்லாம் நிசமென்று நம்பி விட்டேன்; ஈற்றில் அந்த அஞ்சனக்காரன் "ஐயோ, அநுமார் சந்நிதியிற் கோபமடைந்து ஒரு மரக்கொம்பிலேறி அதனைமுறித்தெறிந்து விட்டுக் குதித்தோடி மறைந்து விட்டார். அநுமாருக்கு ஏதோ குறை நேர்ந்திருக்க வேண்டும்; இன்றைக்கு அவரை யொன்றுங் கேட்கமுடியாது; அவரைக்கொண்டு எதனையுஞ் செய்விக்க முடியாது, அடுத்த வெள்ளிக்கிழமை இதிலுஞ் சிறந்த மடையிட்டு அநுமாரை மகிழ்வித்துப் போன மோதிரத்தைக் கண்டுபிடித்து எடுப்பித்துத் தருகிறேன்" என்று சொல்லி மடைப் பண்டங்களையும் எடுத்துக்கொண்டு என்னிடம் மீட்டும் பணம் பெற்றுக்கொண்டு நழுவி யோடிவிட்டான்; போனவன் போனவன்தான்; அந்த மோதிரம் இழந்ததுதான்; பொருள் கொடுத்து ஏன் பேய்ப்பட்டங் கேட்டதுதான் எடுத்த பயன்; ஆனபடியால் அது வேண்டாம; ஆருடங் கேட்டுப் பார்ப்போம்; அதில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்றான், கிழவியும் அதற்கு உடன்பட்டாள்; வீராசாமி தன எண்ணத்தை வெளியிடவில்லை.

—வரும்.

---

சுதேசி இண்டஸ்ட்ரியல் ஓர்க்ஸின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ எஸ் எம் நாயகம் ஸோல்பரி கமிஷனிடம் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமெனத் தெரிவித்திருக்கிறார்.

---

## இலங்கை டெக்னிக்கல் கல்லூரி

1. கல்லூரிப் புதிய வாண்டு 10.7.45ல் தொடங்குகின்றது. சேருவதற்கு விண்ணப்பப் பத்திரங்கள் அதற்குரிய தாளில் 5.5.45 மத்தியானத்திற்கு முன்னதாகக் கிடைக்கவேண்டும். அனுமதிப்பதற்குரிய தாரதாரப்பத்திரங்களுரியவர்களுக்குப் பிரவேசபரீட்சையை 29.5.45ல் எடுப்பதற்கு அறிவிக்கப்படுவார்கள். கல்லூரி ஆபீஸில் அனுமதிப்பு விண்ணப்பப் பத்திரங்களும் பாடத்திட்டங்களும் பெற்றுக் கொள்ளலாம். தாங்கள் சேரவிரும்பும் வகுப்பை மாணவர்கள் குறிப்பிடவேண்டும்.

2. பிரவேச பரீட்சைக்குரிய தாரதாரங்கள்.

(அ) நாள் "எஞ்சினியரிங்" (B. Sc. லண்டன எஞ்சினியரிங் பட்டத்தைச் சேர்ப்பது) லண்டன் மற்றிக்குலேஷன் அல்லது விசேஷசித்தி.

(ஆ) சாயந்தர வகுப்பு (எஞ்சினியரிங் கொமேர்ஸ், அச்சுத்தொழில்) ஜே. எஸ். ஸீ. அல்லது அதற்குச சமமானபரீட்சை. அக்கவுண்டன்ஸி எஸ். எஸ் ஸீ. அல்லது சமமான பரீட்சை.

(இ) தொழில்வகுப்புகள் (இலெக்டிறிக் வைபறிங் Wiring) தச்சுத்தொழில், மோட்டார் சம்பந்தம், றேடியோ, மண் வேலை (பானை முதலியன) இவற்றிற்குப் பிரவேசபரீட்சை கிடையாது. விசேஷத்தராதரங்களும் தேவை இல்லை.

(ஈ) சித்திரம் வரைதல், வர்ணமிடுதல், நெசவு செய்தல் வகுப்புகள்—இவற்றின் விவரங்கள் எழுதிக்கேட்டால் அறிவிக்கப்படும்.

3. வித்தியா வெகுமதி, திறமை காட்டல்.

இவை வருடாவருடம் பிரவேச பரீட்சையைக் கொண்டும், ஆண்டுப் பரீட்சையைக் கொண்டுமளிக்கப்படும்.

இவ்வருடத்தையவழங்கல்:-

நாள் (எஞ்சினியறிங் வகுப்பு)
1 வித்தியா வெகுமதி ரூ. 480 ஒரு வரு.
1 திறமை காட்டல் ரூ. 240 ஒரு வரு.
சாயந்தர வகுப்பு
1 வித்தியா வெகுமதி ரூ. 180 „
நெசவு
1 வித்தியா வெகுமதி ரூ 240 „
சித்திரம்
1 வித்தியா வெகுமதி ரூ. 240 „
வர்த்தகம்
1 வித்தியா வெகுமதி ரூ. 150 „

இவற்றுடன் ஸ்ரீ சந்திரசேகரா நம்பிக்கை வித்யாவெகுமதியும் பெறலாம். இலங்கை வர்த்தக சங்கத்தாரும் இரண்டு வித்தியா வெகுமதி வருடமொன்றிற்கு 50 ரூபாவாக இரண்டு வருடங்களுக்குக் கொடுப்பார்கள்.

4. பிரவேசப்பரீட்சையில் திறமையான சித்தி பெற்றவர்களில் பன்னிரு நாள் எஞ்சினியறிங் வகுப்பு மாணவர்களுக்கும் 6 நெசவுத்தொழில் மாணவர்களுக்கும் பண உதவி கொடுக்கப்படும். அவ்வுதவி அம்மாணவர்களுடைய பொருளாதார நிலைமையையும் நடத்தையையும்பொறுத்து படிப்பு முடியும் வரைக்கும் நீடிக்கப்படும்.

பகல் எஞ்சினியறிங் பண உதவி (Bursary) கூடியதொகை ரூபா 850 ஒரு வருடம்.

நெசவு பணஉதவி கூடியதொகை ரூபா 180 ஒருவருடம்.

R. H. போல்,
தற்காலிக டிறைக்டர்,
இலங்கை டெக்னிக்கல் கல்லூரி.

கொழும்பு, 28, பெப்ரவரி.

G 123 22 3-45

---

## பரமஹம்ஸர் ஜயந்தி விழா

அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை (25-3-45) வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்யாலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜயந்தி விழாக் கொண்டாடப்படுமென அறியலாமேனும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெசவுத் தொழில்

[ சு. நடராசா. ]

இலங்கையின் எவ்விடங்களைப் பார்த்தாலும் அங்கே "அதிக உணவு பயிரிடுக" என்று நாம் காண்கின்றோம். தற்கால உணவுக் கஷ்டத்தின் பொருட்டு இலங்கையில் உணவு அபிவிருத்தி செய்வதற்காக இம்மாதிரியாக விளம்பரங்களைச் செய்து சனங்களைக்கொண்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். என்ன பயன் அளித்தது? ஓட்டைக் குடத்து நீர்போல் ஆயது. மனிதர்க்கு முதல் தேவை உணவு, இரண்டாவது உடை. பிறகுதான் அறிவு. உலகத்தில் உணவு வழங்குபவன் விவசாயி. உடைவழங்குபவன் நெசவுத் தொழிலாளி. முன்னவன் பட்டினி போக்குபவன். பின்னவன் மானத்தைக் காப்பாற்றுபவன். இவை இரண்டுமே உலகத்திற் சிறந்த தொழில்கள் என்பது அறிஞர்கள் துணிபு.

தற்போது இலங்கையில் புடைவைக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது. புடைவைகள் விலையேறி விட்டது. அதிகாரிகள் புடைவை விலைக்கட்டுப்பாடு வைத்தார்கள். சோர விற்பனை துவங்கியது. புடைவையும் (Ration) பண்ணப்போகிறார்கள். ஏழைகள் உண்பதற்கு வழியின்றித் தவிக்கிறார்கள். உடுப்பதற்குப் புடைவையின்றிக் கஷ்டப்படுகிறார்கள். இதனால் எங்கள் மாதர்கள் மானம் பறிபோகின்றதே! இரவிலும் தூக்கம் வராமல் இருக்கிறதா? எங்கட்குச் சுதந்திரம் வேண்டும். நாங்களே அரசியலை நடத்துவோம் என்று ஓலமிடுகிறார்கள். ஆனால், ஏழைகள் படும்பாடு அறிகிறார்களா?

ஆனபடியால், புடைவைக் கஷ்டத்தைத் தீர்க்க அரசாங்கம் ஓர் நல்வழி தேடவேண்டும். நெசவுத் தொழிலை நம்நாட்டில் வேரூன்றச் செய்தல் வேண்டும். புடைவைக் கட்டுப்பாட்டால் இத்துயரை ஒருபோதும் தீர்க்கமுடியாது. இதற்கினி நான்கு பக்கங்களிலும் தொழிற்சாலைகளைத் திறத்தல் வேண்டும். சாதிமத வேற்றுமையின்றிப் பொதுநன்மை கருதல் வேண்டும். அரசாங்கத்தார் இப்போது நெசவுப் பாடசாலைகளை இலங்கையில் பல பாகங்களிலும் அமைத்துள்ளனர். இதுவும் ஓர் பெரும் நன்மையாகும்.

நமது தாய் நாடாகிய இந்தியா விவசாயநாடு என்றும் இந்தியா விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் சொல்கின்றோம். இந்தியர்கள் சுதந்திரமான நெசவுத் தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் நெசவுத் தொழில் விருத்தியடையாததன் மூலகாரணம் யாது? படித்தவர்கள் என்ற அகந்தையோடு இருப்பவர்கள் விவசாய சனங்களைப் பார்த்து, 'பாமர மக்கள் என்றும் படிப்பு வாசனையில்லாத மக்கள்' என்றும் அலட்சியமாகப் பேசுகிறார்கள். என்ன பேதைமை! பாமர ஜனங்களாகிய விவசாயிகள் கள்ளங் கபடில்லாதவர்கள். நெசவுத்தொழிலை நாம் புறக்கணித்து விடுவோமானால் தமிழ் சாதியே அழிந்துபோய்விடும் என்பது காந்தியின் கருத்து. நெசவுத் தொழிலே நமது நாகரீகத்தின் முதற் குழந்தை. முற்காலத்தில் [illegible] ஒவ்வொர் வீட்டிலும் கைராட்டினம் இருந்தது. பெண்கள் நூற்பார்கள். ஆண்கள் நெய்வார்கள்.

அதுமட்டுமல்லாமல் கைராட்டினம் மனிதனது மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கும் ஒருமுகப்படுத்துவதற்கும் ஒரு சிறந்த சாதனம் என்று மகாத்மாகாந்தி வற்புறுத்துகிறார். அதன் மூலமாகக் கடவுளைக் காணலாம் என்றும் உறுதியோடு பேசுகிறார். உலகத்திற்கு உயர்வு அளிப்பது இந்தக் கைராட்டினந்தான் என்று கூறுகிறார். காந்தி இலங்கைக்கு வந்தபோது இலங்கை இளைஞர்களுக்கு, பின்வருமாறு ஓர் பிரசங்கஞ் செய்தார். "கைராட்டினத்தால் கடவுளின் திருக்கரம் வேலை செய்வதை நான் காண்கின்றேன். ஏனென்றால், மனித வர்க்கத்திலே மிகமிகச் சிறந்த சாதாரண மூடையவர்களுடைய தேவைகளை இந்தக் கைராட்டினம் பூர்த்தி செய்விக்கிறது. இதனாலேயே எப்பொழுதும் இதில் வேலைசெய்து கொண்டிருக்கின்றேன். இதனைப் பிரார்த்திக்கிறேன், இதனைப்பற்றி எங்கும் பேசுகின்றேன்" என்று கூறினர்.

இவருக்கு முன்னே திருவள்ளுவரும் இதன் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். அவர் இத்தொழிலே உலகில் சிறந்த தொழில் என்றும் பாவம் அற்ற தொழிலென்றும் கூறித் தன் தொழிலாக இதைக் கைக்கொண்டார்.

தற்போதைய இயந்திரங்கள், விஞ்ஞானசாலைகள் முதலியவற்றால் என்ன பிரயோசனம். மக்களுடைய தேவையை இன்னும் பூர்த்தி செய்யவில்லை. இயந்திரங்களால் வறுமை தீரவே தீராது. அதற்கு மாறாக மனிதர்கள் அந்த இயந்திரத்தின் காரணமாக இன்னும் அதிகமாகப் போராட வேண்டியிருக்கிறது. போட்டி அதிகமாகிறது. மாதர்கள் கண்விழியுங்கள். [illegible] நெசவுத் தொழிலால் [illegible] விளங்கட்டும். நன்மை பெருகட்டும்.


# சேலம் பீடி

யாழ்ப்பாணத்திற்கென்று
விசேஷமாக
சேலத்தில் தயார்செய்த

## 'பூக்கூடை மார்க்கு'

பீடிகள் தற்சமயம் வந்திருக்கிறது.
இந்தபீடி மணத்தாலும்
குணத்தாலும் மேலானது,
சேலத்தில் தயாராகும் பீடிகளில்
முதன்மையானது
எங்கும் எல்லா வியாபாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்,

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்

சிலோன் ஏஜண்டு:
C. S. நடராஜா செட்டியார்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்,

Mis 1-3 to 1-9-45


## ஐக்கிய பண்டசாலைகளுக்கு, புடைவை விநியோகம்

இந்த மார்ச் மாசத்தில் இலங்கையிலுள்ள சகல புடைவை விற்பனவு செய்வதற்கு உத்தரவு பெற்ற இலங்கையிலுள்ள சகல ஐக்கிய பண்டசாலைகளுக்கும் ஐக்கிய மொத்தப்பண்டசாலையில் புடைவைகள் கொடுப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

பெரும்பாலான பண்டசாலைகள் ஒன்றில் இதுவரை புடைவைகள் பெற்றிருப்பார்கள் அல்லது பெறுவதற்கு ஒரு திகதி குறிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆகவே இதுவரையில் புடைவைபெறுதவர்கள் அல்லது பெறுவதற்கு ஒரு திகதி குறிப்பிடப்படாதவர்கள் தாங்கள் புடைவை பெறும் ஐக்கிய மொத்தப் பண்டசாலையின் அதிகாரியைச் சந்தித்து இம்மாதம் முடிவதற்குமுன் தங்கள் புடைவைப்பங்கைப் பெறுவார்களாக.

C. இரகுநாதன்,
ஐக்கியமுன்னேற்றக்கொம்மிஷனருக்காக.

கொழும்பு, 17-3-45
G 127 19, 22, 26-3-45

## எல்லைப்புற நிகழ்ச்சி

புதுடில்லி, மார்ச் 19

எல்லைப்புறத்தில் காந்திஜீயின் கட்டளையின்பேரில் பதவி ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும், இந்த விஷயம் பற்றி இறுதியாக முடிவு செய்வதை அவர் எல்லை அசெம்பிளி காங்கிரஸ் கட்சியிடம் விட்டுவிட்டார் என்றும் விஷயமறிந்த வட்டாரத்தினர் கூறுகின்றனர். சென்றமாதம் எல்லைப்புற தூதுகோஷ்டிக்கு காந்திஜீ சொன்ன யோசனையின் பேரில் காங்கிரஸ் கட்சியினர் கவர்னரை சந்தித்துப் பேசினர் என்று கூறப்படுகிறது. டில்லி அசெம்பிளி வட்டாரத்தினர் காங்கிரஸ் மந்திரிசபை அமைப்பதை வரவேற்கின்றனர். இது காங்கிரஸ் கொள்கையில் புது மாறுதலைக் குறிக்கிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்கள் சம்பந்தமாக அரசினர் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டு, கைதிகள் விடுதலை செய்யப்பட்டால் இதர மாகாணங்களிலும் காங்கிரஸ் பதவியேற்க எல்லை முடிவு உதவியாக இருக்குமென்று கூறப்படுகிறது.

எனினும் காங்கிரஸ் வட்டாரத்தினர் எல்லை நிகழ்ச்சிக்கும் அகில இந்திய நிலைமைக்கும் சம்பந்தமே கிடையாது என்று வற்புறுத்திச் சொல்லுகின்றார்கள். இதை நிரூபிக்க அவர்கள் கூறும் காரணம் இதுதான். எல்லையில் காங்கிரஸ் கமிட்டிகள் சட்ட விரோதமானவையல்ல. எல்லை விவகாரங்கள் விசேஷ கவனத்துக்கு உரிய விசேஷத்தன்மை வாய்ந்தவையல்ல. காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்கள் [illegible] செய்யப்படவில்லை. பிரசங்கங்கள், கூட்டங்கள் நடத்த அவர்களுக்கு சுதந்திரம் இருந்து வருகிறது. கவர்னரும் சட்டசபையைக் கூட்டி மந்திரிசபையை ஜனங்களுக்கு [illegible].

இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ புலாபாய் சொன்ன யோசனைக்கு இணங்குவதானால் மாகாணங்களில் 93 வது பிரிவு ஆட்சியை சீக்கிரமாக ரத்துசெய்து சர்வகட்சி கூட்டு மந்திரிசபை அமைக்க முன்வரக்கூடும். ஆனால் அவ்வாறு இப்போது வசதி செய்வார்கள் என்பதற்கான அறிகுறியைக் காணோம். எனினும் ஜின்னா-தேசாய் சந்திப்பு விஷயமாக காங்கிரஸ் வட்டாரத்தினர் வருத்தப்படுகின்றனர்.

## விவாகம்

நிகழும் தாரண ஆண்டு பங்குனித் திங்கள் 15-ம் நாள் வியாழக்கிழமை இரவு 5மணியளவில் நீராவியடி பிறந்தார் க. ஐயாத்துரை அவர்களின் மருமகன் குருநாகல் சுகாதாரக் கந்தோரில் உத்தியோகம் வகிக்கும் க. கணேசப் பிரபுவுக்கும், நாவடி தம்பாபிள்ளை ஐயாத்துரையின் மகளும் லேடி கவலக ஆஸ்பத்திரியில் உத்தியோகம் வகிக்கும் ஐ. சுப்பிரமணியத்தின் சகோதரியுமான சௌபாக்கியவதி அன்னலட்சுமி அம்மாளுக்கும் சைவாசார முறைப்படி மங்கலியதாரணச் சடங்கு உற்றார் உறவினர் சமூகத்தில் நிறைவெய்தியது.

தம்பதிகள் சகலசம்பத்துகளுடன் நீடு வாழ்வார்களாக.


# மாடுகள் விற்பனை

வண்டில் மாடுகள், நாம்பன் மாடுகள்.
சாவகச்சேரியில்
ஹென்ஸ்மன் வளவில்
24-ந்வ பங்குனி 1945
8 — 12 மணிக்கு இடையில்.
J. T. Hensman,

Mis 538 15, 19, 22-3-45



## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
| --- | --- | --- |
| ரூ. ச. 6 50 | ரூ. ச. 6 50 | ரூ. ச. 10 50 |

இந்தியா இலங்கை தபால் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
| --- | --- | --- |
| ரூ. ச. 9 50 | ரூ. ச. 9 50 | ரூ. ச. 13 50 |



# விளம்பரமின்றேல்

# பெரும்பணமில்லை

## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப்பிரசவத்தை முற்றாகத்தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாதம், (கால் வியாதி) முதலியவற்றைத் தடுத்து மற்றும் நாட்சென்ற கறப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டுபண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படிதைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விக்கியோகஸ்தர்கள்:
கொனசிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போட்கம்பெனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்,

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்,

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 22, March, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org